Shabra (06)

Registered as a Newspaper

Your Friends In Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

# உதயன்

விலை: ரூ. 1-25

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
SHABRA
Unico Finance Ltd.

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆனி 23 உ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 10 (07 – 07 – 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 190

## இந்திய அதிகாரி இன்று வருவார்

யாழ்ப்பாணம், ஜூலை 7

இந்திய உயரதிகாரி ஒருவர் மீண்டும்இன்று யாழ்ப்பாணம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏற்கனவே யாழ்ப்பாணத்துக்கு வந்து யாழ்பாண மக்களது நிலைமைகளை நேரடியாகக் சண்டறிந்த இரண்டு இந்திய அதிகாரிகளில் ஒருவர் தொலைபேசி மூலமாகவும், மற்றவர் நேரடியாகவும் இந்திய அரசுக்கு இங்குள்ள நிலைமையை விளக்கியுள்ளதாகவும் அறியப்படுகிறது.

அவர்களில் ஒருவரே இன்று மீண்டும் யாழ்ப்பாணம் வருகின்றார்.

இதேவேளை 800 தொன் இந்திய நிவாரணப் பொருள்களை ஏற்றிக்கொண்டு 'ஐலண்ட் பிரைட்' கப்பல் இன்று காங்கேசன் வந்துசேரும் என எதிர்பார்க்சப்படுகிறது. (உ–10)

# இந்தியா புதிய யோசனை எதனையும் ஸ்ரீலங்கா அரசிடம் சமர்ப்பிக்கவில்லை!

## தவறான பத்திரிகைச் செய்திகளுக்கு தூதரகம் மறுப்பு!!

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண புதிய யோசனைகள் எவற்றையும் இந்தியா, ஸ்ரீலங்கா அரசிடம் சமர்ப்பிக்கவில்லை.

– இப்படி கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா புதிய யோசனைகளைச் சமர்ப்பித்து இருப்பதாக சில பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டிருந்ததைத் தொடர்ந்தே, இந்தியத் தூதரகம் இம் மறுப்பு அறிக்கையை வெளியிட்டது.

இனப்பிரச்சினைக்கு பேச்சுக்கள் மூலம் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக இருக்கின்றது.

இதையே கடைசியாக ஸ்ரீலங்காவுக்கு அனுப்பிய செய்தியில் இந்தியா மீண்டும் வலியுறுத்தி உள்ளது.

இது சம்பந்தமான முயற்சிகளில் இந்தியா, ஸ்ரீலங்காவுடன் ஒத்துழைக்கத் தயாராக உள்ளது.

ஆனால்இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண புதிய யோசனைகளை இந்தியா, ஸ்ரீலங்கா அரசிடம் சமர்ப்பித்துள்ளது என்ற செய்தி தவறு. அப்படி எந்த யோசனைகளையும் இந்தியா சமர்ப்பிக்கவில்லை.

இனப்பிரச்சினைக்கு எந்த அடிப்படையில் தீர்வு காணவேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் பொறுப்பு முழுக்க முழுக்க ஸ்ரீலங்கா அரசுக்கு உரியது.

— இப்படி இந்தியத் தூதரகத்தின் பத்திரிகை அறிக்கைமேலும் தெரிவித்தது. (உ–எ)

## யு. என். பி. வேட்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டார்

கொழும்பு, ஜூலை 7

ஹிக்கடுவை பிரதேச சபைக்கு போட்டியிடும் யு. என். பி. வேட்பாளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தவர்களில் ஒருவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றது.

கொல்லப்பட்ட வேட்பாளரின் பெயர் மைக்கல். கடந்த வெள்ளிக்கிழமை தாக்கல் செய்யப்பட்ட வேட்பாளர் பத்திரத்தில்இவர் பெயர் இருந்தது.

கட்சி அலுவலகத்தில் ஆதரவாளர்களைச் சந்தித்துப் பேசிய பின்னர் இவர் அருகில் இருந்த வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த சமயம் மோட்டார் காரில் வந்த கோஷ்டி ஒன்று துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. (இ–எ)

## கைதான 15 தமிழர்கள் எங்கே?

கொழும்பு, ஜூலை 7

கடந்த இரண்டு வாரங்களுக்குள்மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கைது செய்யப்பட்ட பதினைந்து தமிழர்கள் பற்றி தகவல் ஏதும் இல்லை.

– இப்படி மட்டக்களப்பு – அம்பாறை பிரசைகள் குழுவின் செயலாளர் சட்டத்தரணி சாம் தம்பிமுத்து தெரிவித்தார்.

மாவட்டத்தில் அதிரடிப் படையினரால் கைது செய்யப்படுவோர் பற்றி தகவல் ஏதும் பெறமுடியாமல் உள்ளது.

கைது செய்யப்பட்டு முகாமுக்குக் கொண்டு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நெல்லியடி ராணுவ முகாமை கரும் புலிகள் தகர்த்தனர்

## பெரும்எண்ணிக்கையான சிப்பாய்கள் பலியாகினர்

### இடிபாடுகளிடையே சடலங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

இராணுவத்தினர் "ஒப்பறேஷன் லிபறேஷன்" மூலம் வடமராட்சியைக் கைப்பற்றிய பின்னர், தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு அங்கு பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

நெல்லியடி மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாமை புலிகள் இயக்கத்தின் விசேஷ அதிரடிப் படையினரான கரும்புலிகள் தகர்த்தனர்.

அந்தத் தாக்குதலின்போது பெரும் எண்ணிக்கையான சிப்பாய்கள் இறந்தனர் என்றும்-

அவர்களில் பலரின் சடலங்கள் இடிபாடுகளுக்குள் இருப்பதாகவும்-

பெரும் எண்ணிக்கையான ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும்- புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதல் தொடர்பாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்ததாவது:-

தமிழ் மண்ணில் ஸ்ரீலங்கா இராணுவம் தொடர்ச்சியான தாக்குதல்களில் இறங்கி வருகின்றது.

இத்தாக்குதல்களின் உச்சக்கட்டமாக வடமராட்சியில் இராணுவம் தனது சகல பலத்தையும் பிரயோகித்து மிகப் பாரிய இன அழிப்பைச் செய்துவருகின்றது.

இந்த வகையில் ஞாயிற்றுக்கிழமை இராணுவத்தினர் வடமராட்சியில் கிராமங்களைச் சுற்றிவளைத்து மக்களை அழிக்கும் நடவடிக்கையில் இறங்கினர்.

மக்களைப் பாதுகாக்கும் நோக்கில் புலிகள் இவர்களை எதிர்த்துத் தாக்குதல் நடத்தினர்.

புலிகளின் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத சிப்பாய்கள் பின்வாங்கி நெல்லியடி மத்திய மகாவித்தியாலய முகாமினுள் முடங்கிக்கொண்டனர்.

**'பிளக் ரைகேர்ஸ்'**

இதைத் தொடர்ந்து விடுதலைக்காக தம்மை முற்றாக அர்ப்பணித்த புலிகள் பிரிவைச் சேர்ந்த 'பிளக் ரைகேர்ஸ்'

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

07-07-1987

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:-
10 28முதல் 11.58வரை

ராகுகாலம்:-
2.58 முதல் 4.28 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

சயன ஏகாதசி விரதம்
சாதுர்மாஸ்ய விரதாரம்பம்

முச்சந்தி முரளி



அவர் உதுகும் சொல்லுவார், உப்பிடி ஆயிரமும் சொல்லுவார், உதுக்கு மேலாலும் சொல்லுவார்!

## ஸ்ரீலங்கா விடயத்தில் இந்திய நிலைப்பாடு: ரஷ்யா தொடர்ந்து ஆதரவு

கொழும்பு, ஜூலை 7

ஸ்ரீலங்கா தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டை சோவியத் யூனியன் தொடர்ந்து ஆதரித்து வருகின்றது.

பிரதமர் ராஜீவ் காந்தியுடனான சந்திப்பின் போது சோவியத் தலைவர் மிக்கெய்ல் கோர்பச்சேவ் இதனை மீண்டும் வலியுறுத்தினார்.

இப்படி 'இந்து' நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் காந்தியின் மாஸ்கோ விஜயம் பற்றிய செய்திகளை 'இந்து'வின் விசேஷ செய்தியாளர் ஒருவர் மாஸ்கோவில் இருந்து அனுப்பி இருந்தார்.

அச் செய்தியில்தான் இத் தகவல் வெளியிடப்பட்டது.

விமானமூலம் உணவுப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மீட்கப்பட்ட ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 7

நெல்லியடி இராணுவ முகாம் மீதான தாக்குதலில் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

ரி 56 ரக தானியங்கித் துப்பாக்கிகள் — 9, ரி 56 ரக கிறனேட் லோஞ்சர்கள் — 2, ஏ. கே. ரக எல். எம் ஜி. — 2, ரொக்கட் லோஞ்சர் — 1, 62 மி. மி மோட்டார் — 2, ஷெல்கள் — 10, றம் மகஸீன் — 6, ஏ. கே. ரக மகஸீன் — 50க்கு மேல், ரி. என். ரி, ஜே. ஆர். ரக கிறனேட்டுகள் — 50க்கு மேல், 7.62 நடுத்தர ரவைகள் — 1500க்கு மேல், கமர் (சுத்தியல்) கிறனேட்டுகள் — 2, கவச அங்கிகள் — 3, காஸ் கிறனேட்டுகள் — 4, ஆர். பி. ஜி. ஷெல்கள் — 2.

கட்டட இடிபாடுகளுக்கிடையிலிருந்து மேலும் ஆயுதங்கள் மீட்கப்பட்டு வருகின்றன என்று புலிகள் தரப்பில் நேற்றுக் காலை தெரிவிக்கப்பட்டது.

## 3 புலிகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

நெல்லியடி இராணுவமுகாம் மீதான தாக்குதலில் வீரமரணம் அடைந்த மூன்று புலிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

தம்மைப் பூரணமாக அர்ப்பணிக்கும் ''பிளக் ரைகேர்ஸ்'' எனும் கரும்புலிகள் பிரிவைச் சேர்ந்த சப்டன் மில்லர், மேஜர் கமல், வின்சன் ஆகியோர் இத்தாக்குதலில வீரமரணமடைந்தனர்.

## யுத்த நிறுத்தத்தை புலிகள் மீறவில்லை

யாழ்ப்பாணம், ஜூலை 7

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட யுத்த நிறுத்தம் புலிகளால் மீறப்படவில்லை.

நெல்லியடி முகாம் மீதான தாக்குதல்பற்றி கருத்துக் கூறுகையில் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் திலீபன் இவ்வாறு கூறினார்.

சிப்பாய்கள் வடமராட்சிக் கிராமங்களைச் சுற்றிவளைத்து இனப் படுகொலை ஒன்றை செய்ய முற்பட்டபோதே நாம் அவர்களைத் தாக்கி ஓடவைத்தோம். அதைத் தொடர்ந்தே அவர்களின் முகாம் மீது தாக்குதல் நடத்தி முகாமைத் தகர்த்தெறிந்தோம் என்றும் திலீபன் கூறினார். (இ–ள)

## இரவோடிரவாக ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேறினர்

அச்சுவேலி, ஜூலை 7

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இராணுவ முகாம் தாக்குதலை அடுத்து ஆயிரக்கணக்கானோர் இரவோடிரவாக அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதிகளுக்கும் தென்மராட்சிக்கும் இடம்பெயர்ந்தனர்.

வல்லை – அச்சுவேலி வாகனப் போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ள போதிலும் ஊரடங்குச் சட்டத்தையும் பொருட்படுத்தாமல் பல குடும்பங்கள் நடந்து அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளை வந்தடைந்தன.

கையில் அகப்பட்ட பொருள்களுடன் உடுத்த உடுப்புடன் இவர்கள் சாப்பாடும் இல்லாமல் வந்து சேர்ந்தனர்.

இவ்வாறு இடம்பெயர்ந்து வந்த அகதிகளுக்கு அரிசியும், பருப்பும், பால்மாவும் உடனடி நிவாரணமாக இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தினரால் புத்தூரில் வைத்து வழங்கப்பட்டது.(இ–11)

### செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி

## மக்களின்பதற்றநிலையை நேரில் கண்டார்

–அச்சுவேலிச் செய்தியாளர்:- ஞான ஆதவன் –

அச்சுவேலி, ஜூலை 7

ஆவரங்காலில் இந்திய உணவுப் பொருள் விநியோகத்தைப் பார்வையிட வந்த இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி வடமராட்சியிலிருந்து ஞாயிறு இரவு இடம்பெயர்ந்து வந்த மக்களின் பதற்றமுற்ற, பரிதாப நிலையை நேரில் கண்டார்.

நேற்று ஆவரங்கால் இராமலிங்க வித்தியாலயத்தில் இந்திய நிவாரணப் பொருள் விநியோகத்தைப் பார்வையிட செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. மோகன் நாராயண் வந்திருந்தார்.

இவர் வந்திருந்தவேளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றியை நிலைநாட்ட நீண்டகாலம் எடுக்கும்

### நெல்லியடி ஒரு படிப்பினை

கொழும்பு, ஜூலை 7

★ நாம் இராணுவ நடவடிக்கை மூலம் கைப்பற்றிய பகுதிகளை ஸ்திரப்படுத்தி வெற்றியை நிலைநாட்ட நீண்டகாலம் எடுக்கும் என்பதை ஞாயிற்றுக்கிழமை நடந்த நெல்லியடிச் சம்பவம் எடுத்துக்காட்டுகிறது.



லலித்

★ வடக்கில் நாம் இராணுவ நடவடிக்கையை இடை நிறுத்தி வைத்திருக்கின்றோம் என்றோ அல்லது இனி இராணுவ நடவடிக்கை நடத்தமாட்டோம் என்றோ எவரும் நிச்சயமாகக் கொள்ள இயலாது.

★ இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காண்பதற்குத் தடையாக, முட்டுக்கட்டையாக இருப்பவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஈரோஸ் இயக்கத்தினருமே. அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வரமாட்டோம் என்று கூறுகிறார்கள். தமது தமிழீழம் இலட்சியத்தை இராணுவ முறையில்

(4ஆம் பக்கம் பார்க்க)

### ஈழத்தில் இந்துமத

## ஆலயங்கள் அழிப்பு காஞ்சிப் பெரியவர் வன்மையாககண்டனம்

திருத்தணி, ஜூலை 7

ஸ்ரீலங்கா இராணுவம் இந்து ஆலயங்கள் மீது தாக்குதல் நடத்தி அழிப்பதை காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீமத் ஜயேந்திர சங்கராச்சாரிய ஸ்வாமிகள் வன்மையாகக்கண்டனம் செய்திருக்கின்றார்.

திருத்தணியில் செய்தியாளர்கள் மத்தியில் பேசுகையில் ஸ்வாமிகள் இதனைத் தெரிவித்தார்.

போராளிகள் இந்து ஆலயங்களுக்குள் தஞ்சமடைந்துள்ளார்கள்என்று கூறினாலும் ஸ்ரீ லங்கா அரசுப்படைகள் இந்து ஆலயங்களைத் தாக்குவது கண்டனத்துக்கு உரியது.

ஸ்ரீ லங்காப் பிரச்சினை

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

**சின்னஞ்சிறு விளம்பரம்**

**காணவில்லை**

சாவகச்சேரியைச் சேர்ந்த உதயன் என்பவரை 3-7-87 இல் இருந்து காணவில்லை. வயது 14 உயரம் 3½அடி நிறம் வெள்ளை. வலது கை, கால் வழங்கமாட்டாது. வெள்ளைக் காற்சட்டை, பிறவுண்சேட் அணிந்திருந்தார். சித்த சுவாதீனம் உள்ளவர். காண்பவர்கள் கிரியோன் கூல்பார் நியூ மார்க்கெட், சாவகச்சேரி என்னும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். (1265)


## நிவாரணப் பொருள்கள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள ரயில் நிலைய முகாம், சந்தனமாதா கோவில் முகாம், நாவாந்துறை சென் மேரிஸ் ஆலய முகாம்களிலுள்ள அகதிகளுக்கு இந்திய நிவாரண உணவுப் பொருள்கள் இன்று வழங்கப்படவுள்ளன.

இந்திய - இலங்கை - யாழ். செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் உணவு வழங்கல் வேலைகளை மேற்பார்வையிடுவர்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. மாணிக்கவாசகர் மேற்கொண்டுள்ளார். (உ-ள)

# இடைக்காட்டில் அதிகரிக்கும் திருட்டுக்கள்

பலாலி, ஜூலை 7

வளலாய் இராணுவ முகாமின் முழுப் பாதுகாப்பில் இருக்கும் இடைக்காட்டுப் பகுதியில் கடந்த சில தினங்களாக வீடுடைத்துத் திருடுதல், வீடுகள் வேலிகள் கொளுத்துதல், பாடசாலையில் திருடுதல் என்பன இடம்பெற்று வருகின்றன.

இடைக்காடு மகா வித்தியாலயத்தில் மட்டும் மூன்றும் திகதி அன்று அறைகள், அலுமாரிகளில் இருந்து முழுப் பூட்டுக்களும் அலவாங்கினால் உடைக்கப்பட்டதுடன் அலுவலகத்தில் இருந்த தொலைக்காட்சிப்பெட்டி, மேசைக்கண்ணாடி, 517 ரூபா ரொக்கப் பணம் என்பன எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

வித்தியாலய அதிபர் இதுபற்றி கல்விப் பணியாளருக்குப் புகார் செய்தார்.

இவற்றைவிட வெளியேறிய பலரது வீடுகளும் உடைக்கப்பட்டு அவ்விடங்களில் உள்ள விலை உயர்ந்த பொருள்கள் அகற்றப்படுவதாகவும், வேலிகள், குடிசைகள் கொளுத்தப்பட்டும், மதில்கள் இடிக்கப்பட்டும் வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-119)

## ஐக்கிய நலன்புரி சங்கத்துக்குப் பாராட்டு

வட்டுக்கோட்டை, ஜூலை 7

எந்த ஒரு சங்கமும் செய்யாத அளவில் சங்கானை நலன்புரிச் சங்கம் அதன் உறுப்பினர்களுக்கு மரணசேவை நிதியாக 2,000 ரூபாவை வழங்கி வருகின்றது. ஓர் உறுப்பினரது குடும்பத்திலே எத்தனை பேர் மரணமானாலும் ஒவ்வொரு மரணத்துக்கும் 2,000 ரூபா நிதி வழங்கி வருகின்றது. இத்தகைய சிறந்த சேவையைச் செய்துவரும் எமது சங்கத்துக்கு சகலரும் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

சங்கானை ஐக்கிய நலன்புரிச் சங்கத்தின் 15 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் திரு. ஆ. இராசையா மேற்கண்டவாறு கூறினார்.

திரு. வை. செந்திநாதன் தலைமையில் இக்கூட்டம் சங்கப்பணிமனையில் நடைபெற்றது.

புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. ஆ. இராசையா தொடர்ந்து உரையாற்றும்போது, 'எமது சங்க உறுப்பினர்களுக்கிடையே சேமிப்புப் பழக்கத்தை உண்டாக்கும் நோக்குடன் சேமிப்புத் திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இதில் சேர்ந்து எமது உறுப்பினர்கள் பெரும் பயன் அடைந்து வருகின்றனர்' என்றார்.

பொதுச் செயலாளர் திரு. செ. குமாரசிங்கம் நன்றி நவின்றார். (இ-161)

### காணமற் போனோர் விவரம்:

## விண்ணப்பப் படிவங்களை வை.எம்.சி.ஏயில் பெறலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

வன்செயல்களின் போதும், இராணுவ நடவடிக்கைகளின் போதும் காணமற்போனோர் பற்றிய தற்போதைய நிலை, விவரங்களை அறிவதற்கான விண்ணப்பப் படிவங்களை யாழ் வை. எம். சி. ஏ. கட்டடத்தில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்தில் சகலரும் பெற்றுக் கொள்ளலாம்.

—இவ்வாறு யாழ் செஞ்சிலுவைச் சங்கச் செயலாளர் திரு. வ. பரமசிவம் தெரிவித்தார்.

காணமற்போன தமது குடும்ப அங்கத்தவர்களை தேடும் முயற்சியில் இறங்கி உள்ளவர்கள் அவர்கள் பற்றிய தகவல்களை உடன் தெரிவிக்கும் பட்சத்தில் துரித நடவடிக்கைகள் எடுக்கப்படும். (உ-ள)

### வல்லையில் நிவாரணம்

வடமராட்சி, ஜூலை 7

வல்லையில் உள்ள அகதிகளுக்கு இந்திய நிவாரண உதவிகள் இந்திய செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளினால் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன.

வல்வெட்டி வேவிற் பிள்ளையார் கோயிலில் வைத்து நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் நிவாரண உதவிகளைப் பெற்றன. (உ-எ-160)

## தென்மராட்சி கிழக்கில் இந்திய நிவாரணப் பொருள்

கொடிகாமம், ஜூலை 7

தென்மராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள அகதிகள் முகாம்களிலுள்ளவர்களுக்கு இன்று செவ்வாய்க்கிழமை முதல் இந்திய நிவாரணப் பொருள்களை வழங்க சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. டி. சுந்தரம்பிள்ளை ஏற்பாடு செய்துள்ளார்.

இந்த ஏற்பாட்டின் முன்னோடியாக இப்பகுதி அகதிகள் முகாம்கள் சிலவற்றை இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் சிலரும் செஞ்சிலுவைச்சங்க யாழ் பிரதிநிதி திரு. ஆர். சுப்பிரமணியமும் பார்வையிட்டனர்.

... வரணி எழுதுமட்டுவாள், உசன் ஈச்சங்காடு ஆகிய இடங்களிலுள்ள முகாம்களுக்கு இவர்கள் விஜயம் செய்தனர்.

இப்பிரதிநிதிகள் வரணிப் பகுதி முகாம்களுக்குச் சென்றபோது அங்குள்ள அகதிகள் தங்கள் குறைகளை கண்ணீர் மல்கத் தெரிவித்தனர்.

''இராணுவ அட்டூழியங்களால் வீடுவாசல் சொத்து சுதந்திரம் அனைத்தையும் இழந்தோம். உற்றார் உறவினர்களை இழந்தோம். இனிநாம் அங்கு சென்று வாழவே முடியாது [illegible] காக்க வேண்டும்'' என்று அகதிகள் கேட்டுக் கொண்டனர். (இ-75)


## தேவை

தொடர்ந்தும் உங்களுக்கு சேவை செய்துவரும்

★ Green Peking Palace ★

ஸ்தாபனத்தாருக்கு கீழ்வரும் வேலைகளுக்கு

உடன் ஆட்கள் தேவை

- Cooks
- Cashier
- Waiters

அனுபவம் வாய்ந்த, மாநகரசபைக்குள் வசிப்பவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும்.

நேரில் தொடர்புகொள்ளவும்:-

Green Peking Palace
69G, 4th Cross Street,
JAFFNA.


## பிரதேச அபிவிருத்தி அமைச்சுத் தமிழலுவற் பிரிவு

தமிழ் இலக்கிய, கலை, கலாசார கழகங்களைப் பதிவு செய்து அவை பற்றிய விபரங்களைத் தொகுத்துக் கொள்ளப் பிரதேச அபிவிருத்தி அமைச்சு முடிவு செய்துள்ளது.

எனவே தமிழ் இலக்கிய, கலை, கலாசாரக் கழகங்கள், மன்றங்கள் ஆகியன தம்மைப் பற்றிய விபரங்களைக் கீழ்க்காட்டியது போன்றதொரு படிவத்தில் அனுப்புமாறு வேண்டப்படுகின்றன; அனுப்ப வேண்டிய அஞ்சல் முகவரி:

தமிழலுவற் பணிப்பாளர்,
பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
244, காலி வீதி,
கொழும்பு — 04.

அஞ்சலுறை மேல் இடதுபுற மூலையில் 'தமிழ்க்கலை மன்றம்' என்ற வாசகம் பொறித்திருத்தல் வேண்டும்.

ம. இராசநாயகம்,
தமிழலுவற் பணிப்பாளர்.

பிரதேச அபிவிருத்தி அமைச்சு,
244, காலி வீதி,
கொழும்பு — 04.

**மாதிரிப் படிவம்:**

**கலாசார சங்கங்களைப் பதிவு செய்தல்**

01. சங்கத்தின் பெயர்:-
02. சங்கம் நிறுவியநாள்:- (ஆண்டு, மாதம், நாள்)
03. சங்கப் பணியக அஞ்சல் முகவரி:-
04. சங்கத்தின் நோக்கங்கள்:-
05. சங்க உறுப்பினர் எண்ணிக்கை:-
06. இதுவரை நடந்த ஆண்டுப் பொதுக் கூட்டங்களின் எண்ணிக்கை:-
07. கடைசியாக ஆண்டுப் பொதுக்கூட்டம் நடந்த நாள்:-
08. சங்கம் ஆற்றும் பணிகள்:-
09. இதுவரை சங்கம் சாதித்தவை:-
10. சங்கக்கூட்டக் குறிப்புகள் ஆவணப் படுத்தப்பட்டுள்ளனவா:-
11. சங்கத்துக்கு வங்கிக்கணக்கு உண்டா:-
12. வங்கிக்கணக்கு உண்டாயின் வங்கிக் கிளையும், கணக்கு எண்ணும்:-
13. சங்கத் தலைவரின் பெயரும், அஞ்சல் முகவரியும்:-
14. சங்கச் செயலாளரின் பெயரும், அஞ்சல் முகவரியும்:-
15. சங்கப் பொருளாளரின் பெயரும், அஞ்சல் முகவரியும்:-
16. பிற விபரங்கள்:-

மேலே தந்துள்ள விபரங்கள் சரியானவை யென உறுதிப்படுத்துகின்றேன்

செயலாளர்

## களை பிடுங்குவோர் கைதாவதால் விவசாயம் பாதிப்பு

கல்முனை, ஜூலை 7

சம்மாந்துறைத் தொகுதியைச் சேர்ந்த மல்வத்தை வயலில் களை பிடுங்கச் சென்ற மூன்று இளைஞர்களை அம்பாறை கொண்டை வெட்டுவான் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் கைது செய்துள்ளனர்.

இவர்களில் இருவர் தமிழ் இளைஞர்கள் ஒருவர் சிங்கள இளைஞர்.

இதேவேளை குருமண்வெளியைச் சேர்ந்த இரு சகோதரர்கள் புல் பிடுங்கச் சென்று வீடுதிரும்புகையில் களுவாஞ்சிக்குடி அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு இன்னும் விடுவிக்கப்படவில்லை.

தற்போது சிழக்கில் வயலில் களை பிடுங்கும் காலமாகையால் தொழிலின்றி அவதியுறும் இளைஞர், யுவதிகள் களை பிடுங்கச் செல்ல முடியாது கஷ்டமுறுகின்றனர். (இ-84)

## இருநாடுகளுக்கு இடையில்தான் போர் நடைபெற முடியும்

மானிப்பாய், ஜூலை 7

போர் என்பதுஇரண்டு நாடுகளுக்கிடையே தான் நடைபெறும். வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போர் நடைபெறுவதாக கூறிவரும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன, 1983 ஆம் ஆண்டிலே போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம் என முழக்கமிட்டு அன்றே சிங்கள நாடு வேறு தமிழ் ஈழம் வேறு என்பதை நிரூபித்து விட்டார். எனவே இப்போது ஈழத்துக்கும் சிங்கள நாட்டுக்குமிடையேதான் போர் நடைபெறுகிறது. எனவே ஈழத்து மக்களின் போராட்டத்தை இந்தியா முதல் உலக நாடுகள் அனைத்தும் அங்கீகரிக்க வேண்டும்.

சுன்னாகம் பிரசைகள் குழுவின் விசேஷ கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசிய பிரசைகள் குழுத் தலைவர் திரு. ரி. மாணிக்கவாசகர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

எமது போராட்டம் நீதியானது. நேர்மையானது என்பதை இந்தியாவின் செயற்பாடுகள் நிரூபிக்கின்றன.

ஆரம்பத்தில் எமது போராட்டத்துக்கு ஆதரவு கொடுத்து ஆயுதங்கள் வழங்கினர். பின்னர் அவற்றைப் பறித்தனர். மீண்டும் அவற்றை திரும்ப வழங்கினர். இதன்மூலம் எமது போராட்டம் நீதியானது என நிரூபித்துள்ளனர்.

நீதியான போராட்டம் எனக் கருதியுள்ள இந்திய அரசாங்கம் எமது போராட்டத்தை அங்கீகரிக்க வேண்டும்.

மனிதநேய அடிப்படையில் கஷ்டப்படும் மக்களுக்கு உணவுப் பொருள்களை வழங்கி நிவாரணம் வழங்கிவரும் இந்தியாவுக்கு நாம் என்றும் நன்றியுடையவர்களாவோம்.

இப்படி அவர் கூறினார். (இ-90)

### மக்கள் முகம்

#### கோண்டாவில் கிராம முன்னேற்ற சங்கம்

மானிப்பாய், ஜூலை7

கோண்டாவில்வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்க நிர்வாக உத்தியோகத்தர்கள் வருமாறு:-

தலைவர் திரு. இ. யோகராசா உபதலைவர்கள் திரு. வே. சுந்தரம், திரு. க. நடராசா செயலாளர் திரு. சி. ஆனந்தராசா உபசெயலாளர் திரு. ச. பாலசிங்கம்.

10 பேர் கொண்ட உறுப்பினர் சபையும் தெரிவு செய்யப்பட்டது. (இ-90)

#### நவஜீவனம் பேக்கர் அம்மையார் காலமானார்

கொடிகாமம், ஜூலை7

பரந்தன் முரசுமோட்டை 'நவஜீவன' ஸ்தாபனத்தின் ஸ்தாபகருள் ஒருவரான அமெரிக்காவைச் சேர்ந்த எலிஸபெத் பேக்கர் அம்மையார் காலமானார்.

கடந்த முப்பது ஆண்டுகளுக்குமேலாக - 'நவஜீவனம்' ஆரம்ப காலம் முதல் - இங்கிருந்துஇந்த ஸ்தாபனத்தை வளர்த்தவர் இவர்.

விவசாயம், கைத்தொழில், மற்றும் கல்வித்துறைமுயற்சிகளுக்கு அமெரிக்க தொடர்புகள் பெற்று இங்கு பல சேவைகளைப் புரிந்தவர் அவர். (உ-75)

#### பஸ் சேவையின்றி மக்கள் அவதி

சாவகச்சேரி, ஜூலை 7

வடமராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளை அடுத்து கனகம்புளியடி ஊடான பருத்தித்துறை — சாவகச்சேரி வாகனப்போக்குவரத்துக்கள் நடைபெறுவதில்லை.

இதனால் கப்புது, அந்தணல்திடல், சரசாலை, [illegible] புளியடிவரை நடந்து வந்தே வாகனங்களைப் பிடிக்கவேண்டி உள்ளது. (உ-81)

## வைக்கோலுடன் யூரியா சேர்ப்பது மூலம் பால் உற்பத்தி அதிகரிக்கும்

மானிப்பாய், ஜூலை 7

புல் அரிதாகக்கிடைக்கும் வரண்ட காலங்களில் பசுக்களின் நிறை குறைவதை அவதானிக்கலாம். புரதச்சத்துக் குறையும்போது கறவைகள் பாலையும் குறைத்து விடும். அக்காலங்களில் நாம் பிண்ணாக்கை கூடிய விலை கொடுத்து வாங்கி வைக்கின்றோம். பிண்ணாக்கிற்குப் பதிலாக வைக்கோலுடன் யூரியாவைச் சேர்த்து உண்ணக்கொடுப்பதன் மூலம் பிண்ணாக்கிலுள்ள போஷணையைப் பெறச் செய்யலாம்.

இவ்வாறு டாக்டர் திருமதி சுமனாதேவி தனபாலசிங்கம் கூறினார்.

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்க சுன்னாகம் கிளையில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

சுன்னாகம் சங்கத் தலைவர் திரு. பா. சுதர்சன் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது.

டாக்டர் திருமதி சுமனாதேவி தனபாலசிங்கம் மேலும் கூறியதாவது:-

வைக்கோலுடன் யூரியா பதனிடுதலை ஒவ்வொருநாளும் செய்து கொள்ளலாம். அல்லது நீண்ட நாட்களுக்கேற்ப பதனிட்டு வைக்கலாம்.

இப்பதனீடு மூலம் பசுக்களின் புரதச்சத்துக் குறைபாட்டை நீக்கி, பாலின் அளவு குறைவடையாது பாதுகாக்கலாம்.

யூரியாவை தனியாக கொடுப்பது நஞ்சாகும். வைக்கோலுடன் கலந்து கொடுப்பதன் மூலம் மாடுகளின் சமிபாட்டுத் தன்மை அதிகரிக்கின்றது. புரதச்சத்துக் கூடுகிறது. உள்ளெடுக்கும் வைக்கோலின் அளவு அதிகரிக்கிறது.

மதிப்பீடுகளின் படி, கால்நடைகளுக்காகும் செலவில் 60 சத வீதத்தை யூரியா பரிகரிப்பின் மூலம் பண்ணையாளர்கள் மீதப்படுத்த முடியும்.

சாதாரணமாகநான்கு போத்தல் பால் எடுக்கும் மாடுகளுக்கு இம்முறை மிகவும் சிறந்தது.

சரியான முறையில் பதனிடப்படாத நிலையில் வழங்கப்படும் வைக்கோல் உணவு மாடுகளுக்கு நஞ்சாகும். எனவேபதனிடுதலை மிக்க அவதானமாகச் செய்தல் அவசியம்.

இப்படி அவர் கூறினார். (இ-90)

## தீவுப்பகுதி மக்களுக்கு சோதனைமேல் சோதனை

அராலி, ஜூலை 7

தீவுப்பகுதி மக்களுக்குச் சோதனைமேல் சோதனை என்ற நிலை போக்குவரத்தில் ஏற்பட்டுள்ளது.

பண்ணைப் பாலம் போக்குவரத்துக்குத் தடைப்பட்ட நாள் தொடக்கம் அராலித் துறை வழியாக பயணம் செய்வோர் மிகுந்த சிரமத்துடன் போக்குவரத்துச் செய்து வருகின்றனர்.

அராலித் துறையில் தெற்கு, வடக்கு இரு துறைகளிலும் புதிதாக அமைக்கப்பட்ட வீதிகள் சிரழிந்துவருகின்றன.

இதனால் மக்கள் வள்ளங்களில் ஏறும்போதும் இறங்கும்போதும் விபத்துக்குள்ளாக வேண்டி இருப்பதுடன் வேலணை அராலிச் சந்தியில் இருந்து துறைவரையிலான வீதியும், சேணியடிச் சந்தியில் இருந்து அராலி வடக்கு துறைவரையிலான வீதியும் மிகவும் மோசமாகச் சிரழிந்துள்ளன.

இதனால் பஸ்கள் வீதியை விட்டு விலகி வேறுபாதைகளைப் பாவிக்கவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. (இ-ரி)

## கோழிக் குஞ்சு விநியோகம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

யாழ்ப்பாணம் அரசாங்க கால்நடை வைத்திய அலுவலகத்தில் இம்மாதம் 27ஆம் திகதி கோழிக்குஞ்சுகள் விநியோகிக்கப்படவுள்ளன.

ஒருநாள் வயதுடைய இக்குஞ்சுகள் யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் ஊடாக விநியோகிக்கப்படும்.

யாழ் கால்நடை வைத்தியப் பிரதிப்பணிப்பாளர் டாக்டர் எஸ். எஸ். பாலச்சந்திரன் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுவருகிறார்.

கோழிவளர்ப்பில் ஆர்வங்கொண்டவர்கள் தங்களுக்குத் தேவையான கோழிக்குஞ்சுகளுக்கு ஜூலை மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் தத்தமது பகுதிகளில் உள்ள கால்நடை வளர்ப்போர் சங்க நிர்வாகசபை உறுப்பினரிடம் அல்லதுயாழ்ப்பாணம் கால்நடைவைத்தியரிடம் முற்பணம் செலுத்திப் பதிவுசெய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ-90)

## அக்டோபர் 19 இல் விசாரணை

அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்ததாக 23 பேர்மீது தொடரப்பட்ட வழக்கு அக்டோபர் 19ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

11 எதிரிகள் தலைமறைவாக உள்ளனர். 12எதிரிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வழக்கு கடந்த வியாழன் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி ரி. சுந்தரலிங்கம் முன் விசாரணைக்கு வந்தபோது திகதி நிர்ணயம் செய்யப்பட்டது.

தலைமறைவாக உள்ள எதிரிகளில் பிரபல 'த் திரிகையாளரான மொர்வின் டி சில்வாவின் மகனான மரியோ தயான் ஜெயதிலகா, ஈ பி. ஆர். எல். எவ். இயக்கத் தலைவர் பத்மநாபா ஆகியோரும் அடங்குவர். (உ-எ)

## ஜயக்கொடியின் இடத்துக்கு ஜயசிங்க

சென்னை, ஜூலை 7

சென்னையில் ஸ்ரீலங்கா உதவித் தூதராகப் பணியாற்றிய திரு. திஸ்ஸ ஜயக்கொடி கொழும்பு திரும்பினார்.

அவரின் இடத்துக்கு திரு. ரொபர்ட் ஜயசிங்க உதவித்தூதராக நியமிக்கப்பட்டிருக்கிறார். (இ-எ)


## உதயன் சஞ்சீவி சந்தா விவரம்

உள்நாடு

| காலம் | உதயன் | சஞ்சீவி | உதயனும் சஞ்சீவியும் |
|---|---|---|---|
| | ரூ ச | ரூ ச | ரூ ச. |
| வருடம் | 391·25 | 104·00 | 495·25 |
| 06 மாதம் | 195·65 | 52.00 | 247 65 |
| 03 மாதம் | 97·85 | 26 00 | 123·85 |

அஞ்சல் செலவு உட்பட

| காலம் | உதயன், சஞ்சீவி | அஞ்சல் செலவு | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூ ச | ரூ ச | ரூ ச. |
| வருடம் | 495 25 | 182 50 | 677-75 |
| 06 மாதம் | 247 65 | 91 25 | 338 90 |
| 03 மாதம் | 123 85 | 45 65 | 169 50 |

★ சந்தா விவரம் மாற்றத்திற்குரியது ★


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதய சங்கற்பம்

எந்நிலைமையிலும் உண்மையே பேசுங்கள். மிதமாகவும் இனிமையாகவும் பேசுங்கள்.

— சுமாமி சிவானந்தர்.


# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
07.07.1987 த.பெ.இல: – 23


## நெல்லியடித் தாக்குதல் உறுதியின் எடுத்துக்காட்டு

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய இராணுவ முகாம் தமிழீழ விடுதலைப் புலிகளினால் தகர்க்கப்பட்டுள்ளது.

பெரும் தொகையான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. படை வீரர்களிலும் பலர் பலியாகி உள்ளனர். புலிகள் சார்பிலும் சிறு இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

வடமராட்சியில் புலிகள் தமது கட்டுப்பாட்டை இழந்த பின்னர் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது பெரிய தாக்குதல் இதுவாகும்.

மே 26 ஆம் திகதி 'ஒப்பறேஷன் லிபறேஷன்–1' ஆரம்பமானது.

எவருமே எதிர்பாராத விதமாக வடமராட்சி முழுவதும் அப்போது இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

பொதுமக்கள் பலர் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடு வாசல்களை விட்டு வெளியேறினர். சொந்த மண்ணிலேயே மக்கள் அகதிகளாக்கப் பட்டனர். ஏராளமான வீடுகள், கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன. பல பாடசாலைகள் இராணுவ முகாம்களாக்கப்பட்டன.

கடந்த ஒரு மாத காலமாக அன்றாட வாழ்க்கை உட்பட சகலதுமே குழம்பிப் போய் இருந்தன.

உளவாளிகளின் நடமாட்டம், கொள்ளைகள், வீடு உடைப்பு ஆகியவற்ருல் மக்கள் கதிகலங்கிப்போய் இருந்தனர்.

சிவில் நிர்வாகத்தின் ஆரம்ப நடவடிக்கையாக பாடசாலைகளை மீண்டும் திறக்கவும் பொலீஸ் நிலையங்களை இயங்கச் செய்யவும் இராணுவ உதவியுடன் அரசு முயன்று வந்தது.

இந்த நிலையிலேயே நெல்லியடி முகாம் தாக்குதல் புலிகளினால் நடத்தப்பட்டுள்ளது.

போராளிகள் தமது இலட்சியத்தில் கொண்டுள்ள உறுதி தற்காலிகத் தோல்வியினால் தளர்ந்து விடவில்லை என்பது இதன் மூலம் நிரூபிக்கப்பட்டு விட்டது.

ஏற்கனவே தமது கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா, கிளிநொச்சிப் பகுதிகளில் செய்தது போல் இங்கும் சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தி விடலாம் என்று எண்ணும் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு நெல்லியடி முகாம தாக்குதல் பெரும் யோசனையைக் கொடுக்கும்.

## ★ வளைகுடாவில் இருந்து

# யுத்தக் கப்பல்களை விலக்க

# அமெரிக்கா நிபந்தனை

வாஷிங்டன், ஜூலை 6

வளைகுடாவில் இருந்து தனது யுத்தக் கப்பல்களை விலக்கிக் கொள்ள அமெரிக்கா சில நிபந்தனைகளின் பேரில் சம்மதித்துக் கொள்ள இருக்கிறது.

இப்படி அமெரிக்க வெளியுறவுப் பேச்சாளர் தகவல் வெளியிட்டார்.

நிபந்தனைகள் வருமாறு;

★ சோவியத் யூனியனும் தனது யுத்தக் கப்பல்களை விலக்கிக் கொள்ளவேண்டும்.

★ யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு ஈரானும் ஈராக்கும் இணங்க வேண்டும்.

யுத்த நிறுத்தம் ஒன்று ஏற்படின் வளைகுடாவில் இருந்து சகல சக்திகளும் வெளியேறி விடும்.

வளை குடாவை சோவியத் யூனியன் தனது கட்டுப்பாட்டில் வைத்து இருக்க அமெரிக்கா ஒரு போதும் அனுமதிக்கப் போவதில்லை.

இப்படி அமெரிக்கப் பேச்சாளர் திரு. பேக்கர் தெரிவித்தார். (இ–எ)

## மொரிஷியஸ் தேர்தல்

போட்லூயி, ஜூலை 6

மொரிஷியஸ் நாட்டில் நாடாளுமன்றத்தேர்தல் அடுத்த மாதம் 30ஆம் திகதி நடைபெறும்.

பிரதமர் டாக்டர் ஜகன்னுத் இதனை அறிவித்தார்.

கூட்டணி அரசுமீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டதைத் தொடர்ந்தே, பிரதமர் நாடாளுமன்றத்தை கலைத்துப் புதுத் தேர்தலுக்கு உத்தரவிட்டார்.

அமைச்சர் ஒருவர் போதைப்பொருள் கடத்தல் சம்பவம் ஒன்றில் சம்பந்தப்பட்டிருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. (உ–எ)

## வெளி உலகில்

## காமன்வெல்த்தில் பாக் மீண்டும் சேருவதை இந்தியா எதிர்க்கும்

புதுடில்லி, ஜூலை 6

காமன் வெல்த் அமைப்பில் மீண்டும் சேர்ந்து கொள்ளும் பாகிஸ்தானின் முயற்சியை இந்தியா எதிர்த்து வாதாடும் என்று தெரிய வருகின்றது.

கனடாவில் உள்ள வான்கூவர் நகரில் அடுத்த காமன்வெல்த் நாடுகள் அமைப்புக் கூட்டம் எதிர்வரும் அக்டோபரில் நடைபெற உள்ளது.

அக்கூட்டத்தில் பாகிஸ்தான் தனது முயற்சியை சில நட்பு நாடுகள் மூலம் மேற்கொள்ளும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காமன் வெல்த் அமைப்பு செயலாளர் நாயகம் ஸ்ரீதத் ரம்பாலுடன் பாகிஸ்தான் இதுசம்பந்தமாக தொடர்பு கொண்டுள்ளது.

1971 இல் நடந்த பங்களாதேஷ் யுத்தத்தைத் தொடர்ந்து பாகிஸ்தான் காமன்வெல்த்தை விட்டு வெளியேறியது.

ஒரு முறை வெளியேறிய நாடு மீண்டும் சேர காமன் வெல்த் அமைப்பு விதிகள் இடமளிக்கா.

அப்படி வெளியேறிய நாடு ஒன்று மீண்டும் சேர்க்கப்பட்டதாக நடைமுறை இல்லை.

பாகிஸ்தானைச் சேர்த்தால் அது இரு தரப்புப் பிரச்சினைகளை காமன் வெல்த் கூட்டங்களில் கிளப்பும்என்று இந்தியா வாதிடுகின்றது (இ–எ)

## நிலக்கண்ணியில் சிக்கிய மதகுரு

மனுகுவா, ஜூலை 6

நிலக்கண்ணித் தாக்குதலில் கத்தோலிக்க மதகுரு ஒருவர் உயிரிழந்தார். இன்னொரு மதகுரு காயமடைந்தார்.

நிக்கரகுவாவில் இச் சம்பவம் இடம்பெற்றது.

நிக்கரகுவா அரசு இச் செயலுக்கு அமெரிக்க ஆதரவுபெற்ற கொன்ருகிளர்ச்சிக்காரர்களைக் குற்றஞ் சாட்டியுள்ளது. (உ–எ)

## 21 பயணிகள் பலி!

காஷ்மீர், ஜூலை 6

ஜம்மு—காஷ்மீர் வீதியில் வெள்ளியன்று நடந்த பஸ் விபத்து ஒன்றில் 21 பயணிகள் உயிரிழந்தனர் — 47 பயணிகள் காயமடைந்தனர்.

## கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து கல்தா கிடைக்கும்

பீகிங், ஜூலை 6

லஞ்சம், ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து வெளியேற்றப்படுவர்.

சீனக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப்பீடம் இப்படி எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

இத்தகவலை நவசீன செய்தி ஸ்தாபனம் அறிவித்தது. (இ–எ)

## எல்லைப்புறக் கிராமங்கள் மீது வியட்நாம் ஷெல் தாக்குதல்

பாங்கொக், ஜூலை 6

எல்லைப்புறக் கிராமங்கள் மீது பலத்த ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டுவரும் வியட்நாமுக்கு, தாய்லாந்து கடும் எச்சரிக்கையை விடுத்திருக்கின்றது.

ஷெல் தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்படா விட்டால் தாய்லாந்துப் படைகளும் கடும் ஆட்லறி தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டி வரும்—இப்படி எல்லைப்புறக் கிராமத்திற்கு விஜயம் செய்த தாய்லாந்து படைகளின் தளபதி எச்சரித்தார்.

தாய்லாந்து—கம்பூச்சியா எல்லையில் உள்ள கிராமங்கள் மீதுதான் வியட்நாம் படைகள் ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

அண்மையில் தாய்லாந்து எல்லைப்புறக் கிராமம் ஒன்றுக்குள் புகுந்த வியட்நாம் துருப்புக்களை, தாய்லாந்துப் படைகள் துரத்தியடித்தன. (இ–எ)

## கம்யூனிஸ்ட் கட்சி இல்லாத தேசிய முன்னணி

புதுடில்லி, ஜூலை 6

கம்யூனிஸ்ட் கட்சிகள் இல்லாத தேசிய முன்னணி ஒன்றை ஏனைய அரசியற்கட்சிகள் உருவாக்க வேண்டும்.

இப்படி ஜனதாக் கட்சித் தலைவர்களில் ஒருவரான விஜுபட்நாயக் தெரிவித்தார்.

இந்த முன்னணி ஏழைகளின் நல்வாழ்வுத் திட்டங்களைத் தயாரித்துச் செயற்படுத்தக்கூடியதான கொள்கைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ–எ)

## பிலிப்பீன்ஸில் மோதல்

மணிலா, ஜூலை 6

பிலிப்பீன்ஸில் இடம்பெற்ற அரசுப்படைகள்—கம்யூனிஸ்ட் கிளர்ச்சிக்காரர்களுக்கு இடையேயான மோதலில் மூன்று பொலீஸாரும் இரண்டு சிப்பாய்களும் கொல்லப்பட்டனர்.

3 கிளர்ச்சிக்காரர்களும் உயிரிழந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ–எ)

## ஆப்கனில் அரசியல் கட்சிகள்

காபூல், ஜூலை 6

சில நிபந்தனைகளுடன் அரசியல் கட்சிகள் இயங்குவதை அனுமதிக்கும் சட்டமூலம் ஒன்றை ஆப்கானிஸ்தானின் ஆளும் புரட்சிக்கவுன்ஸில் அங்கீகரித்தது. (உ–எ)

## செய்திச் சாரம்

### வயோதிப மாதுக்கு மரணதண்டனை

கோலாலம்பூர், ஜூலை 6

போதை வஸ்து வைத்திருந்ததற்காக 69 வயதுப் பெண் ஒருத்திக்கு மலேஷிய நீதிமன்றம் ஒன்று மரணதண்டனை விதித்துள்ளது.

1986 இல் இப்பெண் இரண்டு அவுன்ஸ் மோர்பைன் போதை வஸ்து வைத்திருந்ததற்காகக் கைது செய்யப்பட்டார். (இ–எ)

### ராஜீவுக்கு விருந்து

புதுடில்லி, ஜூலை 6

ஜனதிபதி கியானி ஷெயில்சிங் சனியன்று பிரதமர் ராஜீவ்காந்திக்கு பகல் விருந்துபசாரம் ஒன்றை அளித்துக் கௌரவித்தார்.

இருவரும் குடும்பத்தினருடன் விருந்துபசாரத்தில் கலந்துகொண்டனர்.

ஷெயில்சிங்கின் பதவிக்காலம் இம்மாதம் 25ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. (இ–எ)

### 18 பயணிகள் பலி

லிமா, ஜூலை 6

பெருநாட்டில் பஸ் ஒன்று வீதியை விட்டு விலகி பள்ளம் ஒன்றினுள் விழுந்ததில் 18 பயணிகள் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். 24 பயணிகள் படுகாயம் அடைந்தனர்.

தலைநகரான லிமாவில் இருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் இவ் விபத்து இடம்பெற்றது. (இ–எ)

### பங்களாதேஷில் வீதி விபத்து

டாக்கா, ஜூலை 6

பங்களாதேஷில் நடந்த வீதி விபத்து ஒன்றில் 11 பேர் உயிரிழந்தனர்.

# சித்திரவதை மூலம் பெறப்பட்ட வாக்குமூலங்களை பயன்படுத்துவது நிறுத்தப்படவேண்டும்

5. முடிவுரை

பூஸா இராணுவ முகாமில் தொடர்ந்து சித்திரவதை, துன்புறுத்தல்கள் இடம்பெறுகின்றன என்றும்—

போதிய வைத்திய வசதி இன்மை, சுகாதாரச் சீர்கேடு ஆகியன நிலவுகின்றன என்றும் தொடர்ந்து வரும் முறைப்பாடுகள் சர்வதேச மன்னிப்புச் சபைக்குக் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

சித்திரவதை, துன்புறுத்தல்கள் நிறுத்தப்பட—

சுகாதார நிலை முன்னேற்றம் காண—

பல தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று சர்வதேச மன்னிப்புச் சபை நம்புகின்றது.

அந்த நடவடிக்கைகளில் கீழ்வருவனவும் சேர்க்கப்படவேண்டும்;

★ போதுமான உணவு, ஒழுங்கான, துப்புரவான தண்ணீர் விநியோகம் வழங்கப்படவேண்டும்.

★ போதுமான வைத்திய வசதிகளைப் பெறும் வாய்ப்புக்கள் அளிக்கப்படவேண்டும்.

★ முகாமினுள் தொற்று நோய் பரவுவதைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்; சுகாதாரம் தரம் உயர்த்தப்படவேண்டும்.

★ சட்டத்தரணிகள், உறவினர்களுடன் ஒழுங்கான தொடர்பு கொள்ள முடியாதபடி தடுத்து வைக்கப்பட்டுள்ள முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

★ அவதானிகள் வெளியில் இருந்து சுதந்திரமாக முகாமுக்கு ஒழுங்காக விஜயம் செய்து விரும்பிய கைதிகளுடன் அந்தரங்கமாகப் பேச அனுமதிக்கப்படவேண்டும்.

★ சித்திரவதை செய்து பெறப்பட்ட வாக்குமூலங்களைப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் அவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தும் முறையை நிறுத்தவேண்டும்.

★ காவலில் இருக்கும் போது உயிரிழக்கும் கைதிகளின் மரணம் எந்தக் காரணத்தினுல், எச்சூழ்நிலையில் இடம்பெற்றது என்பது பற்றி சரியாக நிர்ணயம் செய்யப்படவேண்டும். உயிரிழந்தவரின் சடலத்தை உறவினர்களிடம் உடனடியாக ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(முற்றும்)

பூஸா இராணுவ முகாமில் இடம்பெறும் சித்திரவதை, துன்புறுத்தல் மற்றும் சீர்கேடுகள் பற்றி சர்வதேச மன்னிப்புச் சபை ஆறுபக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதன் இறுதிப் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

## பல்கலைக்கழக சட்டம் திருத்தப்படும்

பல்கலைக் கழக மாணவர் அமைப்புக்களை மாணவர்களே நடத்தக் கூடியதாக பல்கலைக் கழகச் சட்டம் திருத்தப்படும்.

திருத்தச் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று பல்கலைக் கழக மான்யக் கமிஷன் தலைவர் டாக்டர் ஸ்டான்லி கல்பகே தெரிவித்தார். (இ–எ)

## அச்சுவேலி கல்விக் கழகம் மீண்டும் இயங்க ஆரம்பம்

பலாலி, ஜூலை 7

அச்சுவேலிக் கல்விக் கழகம் அச்சுவேலியில் தொடர்ந்தும் இயங்கத் தொடங்கிவிட்டது.

இதனுல் இதில் கல்வி கற்றமாணவர்கள் தமது பாடங்களைத் தொடர சழக இயக்குநருடன் உடன் தொடர்புகொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

குறிப்பாக ஜீ. சி. ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கும் ஜீ. சி. ஈ. சாதாரணதர மாணவர்களுக்கும் துரிதப் பயிற்சி வகுப்புகளும், மீட்டல் வகுப்புகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதனுல் மாணவர்கள் தாமதமின்றி இயக்குநருடன் தொடர்புகொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளனர்.

முற்றிலும் இலவசமாக கற்பித்துவந்த இந் நிறுவனம் அண்மையில் இராணுவ நடவடிக்கையின்போது நாசம் செய்யப்பட்டது தெரிந்ததே. (இ–119)

## மீண்டும் உயர்வகுப்பு ஆரம்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 7

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் மீண்டும் ஜீ. சி. ஈ. உயர்தர வகுப்புக்களை ஆரம்பிக்கவேண்டும்.

இவ்வாறு வித்தியாலய பழைய மாணவர் சங்கச் செயலாளர் திரு. க. ச. கந்தசாமி, யாழ் மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:–

இதற்குமுன் கல்விப் பணிப்பாளராக இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற திரு. இரா. சுந்தரலிங்கம், உயர்தர வகுப்பொன்றை மீண்டும்ஆரம்பிப்பதாக வாக்குறுதியளித்திருந்தார்.

அவரது வாக்குறுதியை புயதி கல்விப் பணிப்பாளர் நிறைவேற்ற வேண்டும் எனக்கேட்டுக் கொள்கிறேன்.

– இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ–எ)

நயினையில்

## சென் ஜோன் அம்புலன்ஸ் பிரிவு முதலுதவி முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய உற்சவங்களை முன்னிட்டு சென் ஜோன் அம்புலன்ஸ் பிரிவினர் முதலுதவி முகாம் ஒன்றை கோவிலில் அமைத்துள்ளனர்.

இந்த முகாம் கோவிலின் பின் வீதியில் நாளை 8 ஆம் திகதி முதல் இயங்கவுள்ளது.

முதலுதவிப் பிரிவினர் அடியார்களின் நலன் கருதி கடலில் உயிர் காப்பு, முதலுதவிச் சேவை மேற்கொள்வர்.

இவர்களின் 24 மணிநேரச் சேவைக்கு மாகாண நிறைவேற்று உத்தியோகத்தர் திரு. எஸ். எஸ். ரஞ்ஜன் பொறுப்பாக இருப்பார். அவருக்கு உதவியாக படை அத்தியட்சகர்கள் நகுலராஜ், கிருஷ்ணராசா, சுப்பிரமணியம் ஆகியோர் சேவையாற்றுவர். (இ–எ)

## தளபாடசிற்ப தொழிலகம் தீயினுல்சேதம்

அச்சுவேலி, ஜூலை 9

அச்சுவேலி தெற்கைச் சேர்ந்த சிற்பாசாரியார் திரு. வி. கணேசமூர்த்தியின் மரத்தளபாட சிற்ப தொழிலகம் தீக்கிரையாகி உள்ளது.

ஆயிரக்கணக்கான ரூபா பெறுமதியான நவீன இயந்திரங்களும் மரங்களும் அரைகுறையாக இருந்த மரச் சிற்பங்களும் எரிந்துவிட்டன. (இ–11)

## தமிழ் கலைஞர் குழுவுக்கு கப்டன் குப்தா உறுதிமொழி

காங்கேசன்துறை, ஜூலை 7

தமிழ் கலைஞர்கள் பாதுகாப்பாகவும், சுதந்திரமாகவும் வாழ வழி வகுக்குமாறு கலைஞர்கள் குழு விடுத்த வேண்டுகோளை அடுத்து சாதகமான வழிமுறைகளை மேற்கொள்வதாக இந்தியப் பிரதிநிதி கப்டன் குப்தா உறுதியளித்தார்.

இலங்கை இசைவேளாளர் சங்கத்தின் சார்பில் சங்கத் தலைவர் திரு. என். ஆர். சின்னராஜா, செயலாளர் திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம். நாதஸ்வர வித்துவான் கே. பஞ்சமூர்த்தி ஆகியோர் கொண்ட குழு ஒன்று கப்டன் குப்தாவை யாழ்ப்பாணத்தில் வைத்து சந்தித்தது.

அவரிடம் இந்திய உயர் ஸ்தானிகருக்கான மகஜர் ஒன்றைக் கையளித்து இங்கு தமிழ் மக்கள் குறிப்பாக கலைஞர்கள் படும் கஷ்டங்களைப் பற்றியும், நிம்மதியற்ற வாழ்க்கை குறித்தும் குழுவினர் எடுத்துக் கூறினர்.

இதற்கு பதிலளித்த கப்டன் குப்தா சாதகமான வழிமுறைகளை செய்வதாகத் தெரிவித்தார். (இ–68)

## இந்திய உணவு பெரும் வரப்பிரசாதம்

காங்கேசன்துறை, ஜூலை 7

கஷ்ட நிலையில் வாழும் யாழ் மக்களுக்கு சரியான சமயத்தில் இந்திய உதவிகள் கிடைத்தது பெரும் வரப்பிரசாதம் ஆகும். உலகில் பல செல்வந்த நாடுகள் இருந்தும் இந்தியா எம் மக்களின் துயர் துடைக்க முன் வந்தது பெரிதும் வரவேற்கத்தக்கது. இந்த உதவியைப் பெரிதும் நன்றியறிதலுடன் நாம் ஏற்றுக்கொள்ளுகிறோம்.

தெல்லிப்பளை துர்க்காதேவி ஆலயத்தில் இடம் பெற்ற அகதிகளுக்கான இந்திய உணவு விநியோகத்தின் போது வலி வடக்கு பிரசைகள் குழு ஒன்றியத் தலைவர் சட்டத்தரணி வி. எஸ். கணேசலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

வைபவத்தில் துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தங்கியுள்ள 125 அகதிக் குடும்பங்களுக்கு இந்திய உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.

இந்திய செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த திரு. வேணுகோபால் மற்றும் செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், வலி-வடக்கு பிரஜைகள் குழு ஒன்றியச் செயலாளர் திரு. சிவமகாராசா, வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரம், துர்க்கா தேவி ஆலய செயலாளர் திரு. கே. தணிகாசலம் உட்பட மற்றும் பல பிரமுகர்கள் வைபவத்தில் கலந்து கொண்டனர். (இ–68)



## பொய்யாமொழி

குறள்:
கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்
நாவாயும் ஓடா நிலத்து.

பொருள்:
வலிய சக்கரங்களை உடைய பெரிய தேர்கள் கடலில் ஓடமுடியாது; கடலில் ஓடுகின்ற கப்பல்களும் நிலத்தில் ஓட முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையாகின்றன

**மயூரதி வெளியீடுகள்**

1986 புதிய பாடத்திட்டத்திற்கமைய

1) ஆண்டு 7 கணிதம் – பாடமும் பயிற்சியும்
2) ஆண்டு 8 கணிதம் – பல்தேர்வு வினாக்கள்
3) ஆண்டு 10 கணிதம் – பல்தேர்வுவினாக்கள்

மாணவர் தாமாகவே மீட்டலை நிகழ்த்த உதவும் நூல்களாகும்.

# உதயன்

07-07-1987 செவ்வாய்க்கிழமை

விற்பனையாகின்றன

**மயூரதி வெளியீடுகள்**

1979 முதல் கணிதம் 9-10 பாடமும், பயிற்சியும் என்னும் நூலின் ஆசிரியர்களான **அம்பிகைபாகன் – சச்சிதானந்தன் – ஜெயபாலன்** ஆகியவர்களுள் முக்கிய பங்காற்றியவரும் தற்போது இலங்கையிலுள்ள ஒரேயொருவருமான ஆசிரியரின் ஆக்கங்கள்தான் மயூரதி வெளியீடுகளாகும்.

### திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார்

# வெளியிடங்களில் பாதிப்புற்றோர் விவரங்கள் கோரப்படுகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 7

திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மன்னார் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பிரசைகள் குழுக்கள், அங்குள்ள மற்றைய பொதுஸ்தாபனங்களின் உதவியுடன் அங்கு பாதிக்கப்பட்ட பொதுமக்களது விவரங்களைத் திரட்டி உடனடியாக யாழ். செஞ்சிலுவைச் சங்கத்துக்கு அனுப்பிவைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் விநியோகிக்கப்படும் நிவாரணப் பொருள்கள் போன்று மேற்படி பகுதிகளுக்கும் நிவாரணம் வழங்குவதுபற்றி ஆலோசிக்கப்பட்டு வருகிறது. அதற்காகவே மேற்படி விவரங்கள் கோரப்பட்டிருக்கிறது.

இப் பகுதிகளில் சுமார் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் போதியளவு உணவு, மருத்துவ வசதியின்றி பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ–10)

## புலியின் வால் முன்னணியில்

கொழும்பு, ஜூலை 7

"புலியின் வால்" முன்னணியில் நிற்கின்றது.

சரசவிய 1987 திரைப்பட விழாவை ஒட்டி நடத்தப்படும் போட்டியில் "கொட்டி வலிஹெய" சிங்களத்திரைப் படம் கூடுதல் வாக்குகளைப் பெற்று முன்னணியில் நிற்பதாக அறிவிக்கப்படுகின்றது. (உ-எ)

# சர்வதேசக் குழு ஏன்?

## சிறிமாவின் தலையை சோதிக்கவா?

## ஜனாதிபதி கேட்கிறார்

கொழும்பு, ஜூலை 7

அடுத்த பொதுத் தேர்தலைக் கண்காணிக்க சர்வதேசக் குழு வரவேண்டும் என்று திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா கோருகின்றார். இவருக்கு என்ன நடந்துவிட்டது? இவரின் தலையைச் சோதனை செய்யத்தான் சர்வதேசக் குழு ஒன்று வரவேண்டும் என நான் நினைக்கின்றேன்.

இப்படிச் சொன்னார் ஜனாதிபதி ஜெயவர்த்தன.

பெலியத்தவில் நடைபெற்ற யு. என். பிக் கூட்டத்தில் பேசுகையில் திரு. ஜெயவர்த்தன இப்படித் தெரிவித்தார்.

திரு. ஜெயவர்த்தன மேலும் சொன்னதாவது:

திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா மனித இனத்தைச் சேர்ந்தவர் என்று எண்ணிக் கொண்டு பேசுகின்றாரா? அல்லது பைத்தியம் பிடித்தவர் என்று எண்ணிக்கொண்டு பேசுகின்றாரா? என்பது தெரியவில்லை.

### முல்லேரியா செல்லட்டும்

தேர்தலைக் கண்காணிக்க வெளிநாட்டார் வரவேண்டும் என்று எந்த வெளிநாடாவது கேட்டதுண்டா?

அப்படித்தான் தேர்தல் நடந்து திருமதி. பண்டாரநாயக்கா வெல்கிறார் என்று வைத்துக் கொள்வோம். வெளிநாட்டில் இருந்து வந்த சர்வதேசக் குழு தேர்தல் செல்லாது என்று கூறினால் அதை திருமதி. சிறிமாவோ ஏற்றுக்கொள்வாரா?

தனது தலையை முதலில் திருமதி. பண்டாரநாயக்கா சோதனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். அல்லது சிகிச்சைக்கு முல்லேரியா மருத்துவமனைக்குச் செல்லட்டும்.

### பயிற்சி பெறுமல் எப்படிப் போராடுவது?

தீவிரவாதத்தை அடக்கவே இராணுவப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. நமது நாட்டில் அப்பயிற்சியை அளிக்க முடியாது. ஆகவேதான் பாகிஸ்தானுக்கு அனுப்பி பயிற்சி அளிக்கின்றோம். சிலர் இங்கிலாந்தில் இருந்து வந்து பயிற்சி அளிக்கின்றார்கள். இதை நாம் மறைக்கவில்லை இப்படிப் பயிற்சி அளிப்பதை இந்தியா எதிர்க்கின்றது. திருமதி பண்டாரநாயக்காவும் எதிர்க்கின்றார். தீவிரவாதிகளும் எதிர்க்கின்றார்கள். அப்படியானல் நாம் எப்படி தீவிரவாதிகளை எதிர்த்துப் போராடுவது?

பயிற்றப்படாத இராணுவத்தை வைத்துக் கொண்டு போராடுவதா?

அல்லது எமது கைகளையும் கால்களையும் பாவித்துப் போராடுவதா?

அல்லது கற்களால் எறிந்து போராடுவதா? — இப்படி ஜனாதிபதி கேட்டார். (இ–எ)

## மக்களின்..

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஆவரங்கால் சிவன் கோயில் வீதியிலும்யாழ்–பருத்தித்துறை பிரதான வீதியிலும் வாகனங்கள் செல்ல முடியாதளவுக்கு பெரும் கூட்டம் திரண்டிருந்தது. நெல்லியடி இராணுவ முகாம் தாக்குதலை அடுத்து இரவோடிரவாக இடம் பெயர்ந்தவர்களே இவர்கள்.

இதனை அவதானித்த திரு. மோகன் நாராயண் உணவு விநியோகத்தைப் பார்வையிட்ட பின்பு சம்பந்தப்பட்ட இடத்திற்கு திரும்பி வந்தார். அகதிகளின் பரிதாப கதைகளைக் கேட்டறிந்து கொண்டதுடன் அவர்களின் தோற்றங்களையும் பார்த்து மிக மனவேதனை அடைந்தார்.

உடுப்பிட்டியைச் சேர்ந்த திரு. தவலிங்கம் என்பவர் (வயது 45) தனது குடும்பத்திற்கு ஏற்பட்ட இழப்புக்களையும் உடுப்பிட்டிப் பகுதியில் வியாழக்கிழமை தொடக்கம் இராணுவத்தினர்செய்து வரும் அட்டகாசங்களையும் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிக்கு தெளிவாக எடுத்துக் கூறினர்.

### கொட்டியாக்களைக் காட்டித் தராவிட்டால்......

தொடர்ந்து அவர் கூறுகையில், 'கொட்டியாக்களை காட்டித் தராவிட்டால் உங்களது குடும்பத்தையே கொலை செய்வோம்' எனக் கூறி வீட்டின் கதவை உடைத்து உள்ளே புகுந்த இராணுவத்தினர் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடித்துச் சென்றனர் என்றார்.

இராணுவத்தினர் வீதிக்கு வீதி ரயர்களைப் போட்டு தீமூட்டி அட்டகாசம் செய்வதாகவும் உயிருக்குப் பயந்த நிலையில் தாங்கள் வெளியேறியதாகவும் கூறினர்.

வல்வெட்டியைச் சேர்ந்த குடும்பப் பெண் ஒருவர் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிக்கு தனது நிலைமையை எடுத்துக் கூறும்போது, தனது வீட்டிற்குள் புகுந்த 25க்கு மேற்பட்ட இராணுவத்தினர் அடங்கிய குழு கொச்சைத்தமிழில் கெட்ட வார்த்தைகளை பேசி அட்டகாசம் செய்ததாகக் கூறினர்.

இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி, அகதிகள் தங்கியிருக்கும் ஆவரங்கால் சிவன் கோயில், அச்சுவேலி பிள்ளையார் கோயில் ஆகியவற்றுக்குச் சென்று நிலைமையை நேரில் அவதானித்தார். (இ-11)

## 15 ஆயிரம் குடும்பங்களுக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 7

இந்திய நிவாரணப் பொருள்கள் நான்காவது நாளாக நேற்றும் பல பகுதிகளில் இந்திய, ஸ்ரீலங்கா செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளினால் விநியோகிக்கப் பட்டன.

நேற்றுவரை பதினையாயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்திய நிவாரணப் பொருள்கள் கிடைத்துள்ளன. (உ–10)

### மூன்றாவது டெஸ்ட் போட்டி

# பாகிஸ்தானிடம் இங்கிலாந்து தோல்வி

இங்கிலாந்து அணிக்கு எதிராக லீட்ஸில் நடைபெற்ற மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி இன்னிங்ஸினாலும் 18 ஓட்டங்களினாலும் வெற்றிபெற்றது.

இதன்மூலம் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்த டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் 1–0 என்ற கணக்கில் முன்னணியில் திகழ்கிறது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 136 ஓட்டங்களை மட்டும் எடுத்து ஆட்டமிழந்தது.

பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்ஸில் 353 ஓட்டங்களைப் பெற்றது.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 218 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸ் ஆட்டத்தைத் துவக்கிய இங்கிலாந்து அணி 199 ஓட்டங்களை மட்டும் பெற்று ஆட்டமிழந்தது.

பாக். அணித் தலைவர் இம்ரான்கான் 40 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை வீழ்த்தினர். (உ)

## கைதான----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

செல்லப்படுவோர் பற்றி விசாரித்தால் "நாங்கள் எங்கே கைது செய்தோம்?"— என்று கூறி படையினர் கைவிரிக்கின்றார்கள்.

– இப்படி திரு. சாம் தம்பிமுத்து சொன்னர். (உ–எ)

## சீக்கியத் தீவிரவாதி தற்கொலை

புதுடில்லி ஜூலை 6

முன்னாள் இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் வைத்தியாவைக் கொலை செய்த தற்காகத் தேடப்பட்டு வந்த சீக்கியத்தீவிரவாதி ஒருவர், பொலீஸார் சுற்றிவளைத்ததும், தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார். (உ–எ)

## உடுவில் மகளிர் கல்லூரி

**Further Education Programme**

G. C. E. 'O' Level பரீட்சையில் ஆங்கில மொழியுடன் சித்தியடைந்துள்ள மாணவர்கட்குரிய கற்கைநெறிகள்

JOB ORIENTED COURSES

- London Pitman Examinations
- ★ பரீட்சைகள் எமது நிலையத்திலேயே நடாத்தப்படும்.

London Pitman நிறுவன பரீட்சைக்குரிய கற்கைநெறிகள்
- Short Hand
- Type – Writing
- Word – Processing
- Computer aided Typing
- N.C.E. (Pitman) English

குறிப்பு:- WORD PROCESSING: இக்கற்கை நெறிக்கு ஏற்கனவே Basic, Cobol நெறிகளில் சித்தியடைந்தோர் இந்நெறியையும் பூர்த்தி செய்து Diploma சான்றிதழைப் பெறமுடியும். Duration 2 to 4 Months.

★ மேலும், சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆகிய நெறிகளைப் பூர்த்தி செய்தோர்/ பயிற்சி பெறுவோரும் இக்கற்கைநெறியை பின்பற்றி உரிய பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

★ முழுக் கட்டணம் 1,500. தவணை முறைச் சலுகையுண்டு.

**வகுப்புகள்:-**

கிழமை நாட்கள்: புதன் வெள்ளி

வார முடிவு:- சனி, ஞாயிறு

**விண்ணப்ப முடிவு திகதி: 15.7.87**

● மேலும் விபரங்கட்கு தொடர்புகொள்க

(1267) —நிர்வாக அதிபர்

## விசேட அறிவித்தல்

1981/82 சமயபாட (றோ. க)

ஆசிரியர்களுக்கு

உங்களது பரீட்சை முடிவுகளைப் பற்றிய விபரங்களை அறிய பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை அதிபர், உடனடியாகக் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் வந்து சந்திக்கும்படி கேட்கின்றார்.

மறைக்கல்வி இயக்குநர்

(1266) யாழ்ப்பாணம்.

## வெற்றியை---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

அடையப் போவதாக வலியுறுத்திக் கூறுகிறார்கள்.

★ ஆகையால் ஸ்ரீலங்கா அரசாங்கம் புதிய யோசனை எதையும் வைப்பதால் என்ன பயன்?

★ எனினும் டிச. 19 யோசனை குறித்து எமது அரசின் நிலைப்பாடு மாறவில்லை.

★ தாமாகவே யுத்த நிறுத்தத்தை அறிவித்துவிட்டு, நெல்லியடியில் புலிகள் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள். இராணுவ ரீதியில் அவர்கள் பிரச்சினையை அணுகுகிறார்கள் என்பதையே இது காட்டுகிறது.

★ இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு அரசியல் வழி மூலம் தான் என்பதிலும் எமது நிலைப்பாடு மாறவில்லை.

★ புலிகளும் ஈரோஸும் பேச்சுவார்த்தைக்கு வர மறுத்தாலும், அவர்களை அதற்கு இணங்கச் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என நான் விரும்புகிறேன்–

நேற்று ரூபவாஹினியில் அளித்த விசேட பேட்டி ஒன்றில் அமைச்சர் லலித் அத்துலத்முதலி இக் கருத்துக்களை வெளியிட்டார். (அ)

## ஸ்ரீலங்கா---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொதிகளை யாழ் குடா மீது போட வேண்டிய நிர்ப்பந்தம் இந்தியாவுக்கு ஏன் ஏற்பட்டது என்பதற்கான காரணங்களையும் திரு. கோர்பச்சேவ் ஏற்றுக்கொண்டார் என்றும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. (இ–எ)

## ஆலயங்கள்---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)

கொந்தளிப்பாக மாறுவதற்குக் காரணம், திட்டமிட்ட இனப்படுகொலையில் அரசுப்படைகள் ஈடுபடுவதே ஆகும்.

– இப்படி காஞ்சி ஸ்வாமிகள் தெரிவித்தார். (உ–எ)

## ஐ. தே. க சார்பில் 2 தமிழர்

கொழும்பு, ஜூலை 7

கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் இரு தமிழர்களும் பன்னிரண்டு முஸ்லிம்களும் போட்டியிடுகின்றனர்.

எஸ். கோவிந்தராஜன், ரி. எஸ். திலகஜோதி ஆகிய இருவருமே போட்டியிடும் தமிழராவர்.

சமசமாஜக் கட்சி சார்பில் ஐந்து தமிழர்களும், ஐந்து முஸ்லிம்களும் போட்டியிடுகின்றனர்.

கொழும்பு மாநகர சபையின் 53 வட்டாரங்களுக்கு மொத்தம் 223 [illegible] போட்டியிடுகின்றனர். (இ–எ)

## நெல்லியடி--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் கரும்புலிப் படைப் பிரிவினர் முகாம் மீது பாரிய தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் மாடிக் கட்டடங்கள் நான்கைக் கொண்ட நெல்லியடி முகாம் முற்றாகத் தகர்க்கப்பட்டு புலிகளின் பூரண கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டது.

### இடிபாடுகளுக்குள்

கட்டட இடிபாடுகளுக்குள் நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் உயிரிழந்தனர். நேரடி மோதலில் பலர் கொல்லப் பட்டனர்.

10 மணி நேரம் நடைபெற்ற மோதலில் அதிக ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டன.

சிப்பாய்களின் பாவனைக்காக உபயோகிக்கப் பட்ட 'சலாடின்' கவச வாகனம், ஸ்கவுட்கார், டிரக்வண்டி, கமர்பிளாக் மினிபஸ் என்பன தாக்குதலின்போது சேதமாக்கப்பட்டு புலிகளால் எரிக்கப்பட்டன.

புலிகளின் தாக்குதலின்போது ஹெலி ஒன்று சிப்பாய்களுக்கு உதவியாக நின்று போரிட்டது.


நெல்லியடி முகாமைச் சூழவுள்ள முகாம்களிலிருந்து உதவிக்கு விரைந்த சிப்பாய்களை புலிகள் தடுத்துப் போராடி பின்வாங்கச் செய்தனர். புலிகளின் தரப்பில் [illegible] அடைந்தனர் – இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ–எ)

## ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட் வழங்கும்

### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
| --- | --- | --- |
| 3 மாதங்கள் | — | 14% |
| 6 மாதங்கள் | — | 16% |
| 12 மாதங்கள் | 16% | 18% |
| 24 மாதங்கள் | 18% | 20% |
| 36 மாதங்கள் | 20% | 22% |

நிதிக்கூற்று



நிதித் துறையில் நாணயம் மிக்க நண்பன்

**ஷப்ரு**

இயக்குநர் சபை:-

எஸ். பாலசுப்பிரமணியம் ஏ. ஐ. பி. (லண்), ஜே. டி. நவரட்ணம் ஏ. ஐ. பி. (லண்), வீ. பி. ஈ. கருணாரட்ண- சட்டத்தரணி, ஆர் பாலசுப்பிரமணியம், ஓ. வீ. எட். ஜோசப் பாரி- பி. ஏ.

**யாழ். முகவர்:-**
230, நாவலர் வீதி,
[இலுப்பையடிச் சந்தி]
யாழ்ப்பாணம்.

**மானிப்பாய் முகவர்:-**
184, யாழ் – மானிப்பாய் வீதி,
[இலங்கை வங்கி கட்டடத்திற்கு அருகில்]
மானிப்பாய்.

மேலும் தகவல்களைப் பெற எமது அலுவலகத்துடன் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமோ தொடர்பு கொள்ளலாம்.

**ஷப்ரு நிதி நிறுவனம்**

61, நியூ புல்லர்ஸ் வீதி, கொழும்பு – 4.
தொலைபேசி:- 589310, 500576.

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 07-07-1987.

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd at 292/2 Navalar Road, Jaffna on Tuesday July 07, 1987 Registered as a Newspaper at the General Post Office under number QJ/94/N/87

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org